சாட்சிகள் வாக்குமூலம்
பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

O.S. 35/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.துரைச்சாமி (வா.சா.–3) | தொழில் | | |
| த/பெ.<br>க/பெ. | : | நாராயணசாமி | வயது | | 78 |
| கிராமம் | : | பாப்பம்பட்டி | இனம் | | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 03.07.2025 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

1973 ஆம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு ஜுன் மாதம் 3 ஆம் நாள் அளித்த சாட்சியம்.

<u>வாதி தரப்பு முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 3 ஆம் சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை தான். அவை எனக்கு நன்றாக தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1 | | எனது ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |

எனது சாட்சியத்தையும், சான்றாவணங்களையும் ஏற்று வாதிகள் வழக்கில் கோரிய பரிகாரங்களை வழங்கி உத்தரவிட வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை :

நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரில் எவ்வளவு நாட்கள் வசித்து வருகிறேன் என்றால் நான் பிறந்ததிலிருந்தே அந்த முகவரியில் குடியிருந்து வருகிறேன். வாதிகள் எனது உறவினர்களா என்றால் சரிதான். இந்த வழக்கைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது, வாதிகள் எனது உறவினர்கள் என்பதால் இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.